**21.04.2026.**

**O.S.No.357/2019**

**வா.சா. 2: அமுதன்**

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>**:-**

1) வாதி வீட்டிற்கு அருகில் வசித்து வருவதாக சொல்வதற்கு நான் ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி ராஜமாணிக்கத்தின் இடத்தை பிரதிவாதி 12.07.2012 ல் கிரயம் வாங்கியது தொடர்பாக என்ன பிரச்சணை உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. 12.07.2013 ல் வாதி என்ன சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்ற விவரம் தெரியது. வாதி வழக்கில் என்ன சொல்லியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் பணம் கொடுத்துள்ளார் அதை திருப்பி தரவில்லை என்பதற்காக வழக்கு போட்டுள்ளார். 05.10.2012 வாதி, பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் போது நான் உடன் இருந்திருந்தால் அவர் அனுப்பிய சட்ட அறிவிப்பிலும், வழக்குரையிலும் இந்த விவரத்தை சொல்லியிருப்பார் என்றும் அவ்வாறு சொல்லாததால் நான் அந்த சமயத்தில் அங்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2) 05.10.2012 கொடுத்தாக சொல்லப்படும் பணம் ரொக்கமாகத்தான் கொடுக்கப்பட்டது. நான் டீவி, பிரிட்ஜ், வாசிங்மிஷின் கடையில் வேலை செய்து வருகிறேன். 05.10.2012 தேதியில் வாதி இந்த புரோநோட் தவிர வேறு எதுவும் கொடுத்தாரா என்று தெரியாது என்றால் காசோலை ஒன்று கொடுத்தார். எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்த அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி அழைத்ததன் பேரில் தான் சாட்சி அளிக்க வந்துள்ளேன். என்னுடைய பிரமாண பத்திரத்தில் பாரா 3 ல் முதல் பக்கத்தில் பிரதிவாதி ஏற்கனவே 05.01.2013 என முன் தேதியிட்டு பூர்த்தி செய்து எடுத்த வந்த HDFC காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சாட்சியிடம் கேட்ட போது மேற்சொன்ன தேதி போட்டு தான் பிரதிவாதி காசோலை கொடுத்தாக சொல்கிறார்.

3) என்னுடைய வாக்குமூலத்தின் படி காசோலை ஏற்கனவே பூர்த்தி செய்து எடுத்து வரப்பட்டது. சாட்சி பின்னிட்டு என் முன்னிலையில் பிரதிவாதி கையெழுத்து செய்ததாக சொல்கிறார். வாதி வெங்காய மொத்த வியாபாரமும் ரியல் எஸ்டேட் தொழிலும் ரொம்ப காலமாக செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி வாதி பிரதிவாதிக்கு ஒரு சொத்தை 2012 ல் கிரயம் செய்து கொடுத்தார் என்றும் அதில் ஒரு பகுதியாக 35 சதுரடி நெடுஞ்சாலை துறைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதால் அதற்காக பணத்தை நிறுத்துவதற்காக கொடுக்கப்பட்ட காசோலை தான் இந்த காசோலை என்று சொன்னால் அது பற்றி தெரியாது. மேற்படி காசோலை வசூலுக்கு தாக்கல் செய்து சட்ட அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பாகவே இந்த பிரதிவாதி ஒரு சட்ட அறிவிப்பை வாதிக்கு (வாசாஆ.6) அனுப்பியுள்ளார் என்று சொன்னால் அது பற்றி தெரியாது.

4) நான் சொல்வது போல் 05.10.2012 ஆம் தேதி பிரதிவாதி வாதியிடம் ரூ.4,50,000/- கடன் வாங்கவில்லை என்றும் அதற்கு ஆதரவாக காசோலை கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு 3 மாதத்தில் பணத்தை திருப்பி கொடுப்பதாக பிரதிவாதி எக்காலத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதே போல 100 க்கு 1 ரூபாய் வட்டி கொடுப்பதாக பிரதிவாதி ஒத்துக்கொண்டதாக எக்காலத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல 05.10.2012 ஆம் தேதி பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்கவில்லை என்றும் மேலும அந்த காசோலைக்கு எவ்வித மறுபயனும் இல்லை என்றும் வாதி எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆதராவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல சொன்ன தேதியில் எவ்வித பண பரிமாற்றமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Subordinate Judge, Attur.**